# கோவையில் தசை சிதைவு நோய் குறித்த கருத்தரங்கு

கோவை, ஜூலை 5–
கோவை, ஜென்னி கிளப்பில் எம்.டி.சி.ஆர்.சி மற்றும் அரசு பொது சுகாதார துறை சார்பில் டுஷின் தசை சிதைவு நோய் பற்றிய சமுதாய கருத்தரங்கு நடைபெற்றது. இந்த கருத்தரங்கை டாக்டர் பிரோஸ்கான் தொடங்கி வைத்தார்.

எம்.டி.சி.ஆர்.சி நிர்வாக இயக்குனர் முனைவர் பி.ஆர். லஷ்மி முன்னிலை வகித்தார்.

டாக்டர் கிருஷ்ணா, டாக்டர் நந்தா லஷ்மி, டாக்டர் பூபேஷ் உள்பட பலர் கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசினார்கள்.

இந்த கருத்தரங்கில் பொது சுகாதாரத்துறை அலுவலர்கள் 200க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த கருத்தரங்கில் டுஷின் தசை சிதைவு நோய் பற்றி சமுதாயத்தில் உள்ள அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் கருத்தரங்கில் விளக்கிக் கூறப்பட்டன.